2025 அக்டோபர் மாதம் 28 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 19/2024

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 – ஆம் தேதி செவ்வாய்கிழமை திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW5 – நாச்சியப்பன் |
| தகப்பனார் பெயர்: | நடராஜன் |
| ஊர்: | மதுரை |
| வட்டம்: | மதுரை |
| மாவட்டம்: | மதுரை |
| தொழில்: | ஓய்வு பெற்ற பொது மேலாளர் (SPIC நிறுவனம், தூத்துக்குடி) |
| வயது : | 78 |

28.10.2025

(3 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 1, 2, 4, 5, 7, 8 எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 355 BNSS – ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட புகார்தாரரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் மதுரையில் வசித்து வருகிறேன். நான் மதுரை உறங்கான்பட்டியில் குடோன் எண்.90, மாஹியா தொழிற்பேட்டையில் ஷெட் வைத்திருந்தேன். எனது ஷெட் அருகில் குடோன் எண்.89 என்பதை எனது நண்பர் ராஜ்குமார் வைத்திருந்தார். வழக்கின் 1வது எதிரி ரகுநாதன் என்பவர் ஷெட் எண்.89, 90 ஆகியவற்றை வாடகைக்கு எடுத்து மருந்து தயாரிக்கும் தொழில் செய்து வந்தார். 2004ம் வருடத்திலிருந்து அந்த தொழிற்சாலையை நடத்தி வந்தார். 24.06.2013ம் தேதி அந்த நிறுவனத்தை காலி செய்துவிட்டார்.

எனக்கும் 5 வது சாட்சி ராஜ்குமாருக்கும் மேற்படி ஷெட்களை காலி செய்ததற்கான கடிதத்தை கொடுத்தார். நான் தொழிற்சாலை நடத்துபவர்களுக்கு காலி செய்துவிட்டதாக எழுதிக்கொடுத்துவிட்டேன். கடந்த 20.03.2014 ம் தேதி தேனி மண்டலம், தேனி சரக மருந்துகள் ஆய்வாளர், சுடலைவேல் முருகையா என்பவர் வந்தார். அவர் எங்களிடம் விசாரித்தார். ரகுநாதன் எப்போது மேற்படி ஷெட்டை காலி செய்தார் என்று கேட்டார். நான் ரகுநாதன் என்பவர் மேற்படி குடோனை காலி செய்துவிட்டு, எனக்கு எழுதிக்கொடுத்த கடிதத்தை அவரிடம் ஒப்படைத்தேன். அந்த கடிதம் ஏற்கனவே அ.சா.ஆ.91 மற்றும் அ.சா.ஆ.92 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ராஜ்குமாருக்கு எழுதிக்கொடுத்த கடிதம் ஏற்கனவே அ.சா.ஆ.89 மற்றும் அ.சா.ஆ.90 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரகுநாதன் ஷெட்டை காலி செய்த பின்பு மருத்துவ தயாரிப்பு எதுவும் அங்கு நடைபெறவில்லை. மருந்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 28.10.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.28 18:29:26 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
28.10.2025

2025 அக்டோபர் மாதம் 28 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 19/2024

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 – ஆம் தேதி செவ்வாய்கிழமை திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW6 – Dr.சுகுணா |
| தகப்பனார் பெயர்: | ஜெயராஜ் |
| ஊர்: | மதுரை |
| வட்டம்: | மதுரை |
| மாவட்டம்: | மதுரை |
| தொழில்: | தற்போது - Block Medical Officer, Poovanthi, Sivaganga District. |
| வயது : | 58 |

28.10.2025

(3 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 1, 2, 4, 5, 7, 8 எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட புகார்தாரரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்போது, சிவகங்கை, பூவந்தியில், வட்டார மருத்துவ அலுவலகராக பணபுரிந்து வருகிறேன். 29.05.2014 ம் தேதி தேனி சரக மருந்துகள் ஆய்வாளர் எனக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தார். மதுரை மாவட்டம், ஒத்தக்கடை, கதவு எண்.2/566, ஜெ.பி.எஸ். காம்ப்ளக்ஸில் இயங்கிவரும் மெடிக்கான் ஃபார்மா, உரிமையாளர் ரகுநாதன் என்பவருடைய நிறுவனத்தின் உரிமம் விபரம் பற்றி கேட்டு என்னிடம் கடிதம் அனுப்பயிருந்தார். அந்த கடிதம் ஏற்கனவே அ.சா.ஆ.105 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த கடிதத்திற்கு 20.06.2014 ம்

தேதி நான் பதில் அனுப்பினேன். அந்த பதில் ஏற்கனவே அ.சா.ஆ.106 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தில் Capsule Syrup மாத்திரைகள் தயாரிக்கக்கூடிய உபகரணங்கள் இருந்ததையும், உணவுப்பொருட்கள் தயாரிக்க 21.06.2013 ல் உரிமம் பெற்றிருந்ததையும் பதில் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். மேற்படி உரிமம் 20.06.2014 ம் தேதி முடிவடைந்தது என்ற விபரத்தை தெரிவித்தேன். மருந்துகள் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 28.10.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
28.10.2025